IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.121/2006
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.20 PM.

பி.வா.சா.1 சாட்சி விக்னேஷ்வரன் த.பெ.ஈஸ்வரன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 25.11.2025 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் எதன் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தகப்பனார் சொல்லி தாக்கல் செய்துள்ளேன். தாவா வழக்கு வாதியினுடைய பாத்தியப்பட்ட இடத்தில் என் தாத்தா 1ம் பிரதிவாதி வாதியின் இடத்தை இடைஞ்சல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வழக்கு விபரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். எனக்கும் வாதிகளுக்கும் தாவா சொத்து எனது வீட்டிற்கு வடக்கே உள்ள சொத்து என்றால் சரிதான். வாதி 3 இலக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் 2 இலக்க சொத்துதான் உள்ளது.

2. எனது வீட்டிற்கு வடக்கே உள்ள சொத்துதான் வாதிகளின் சொத்து என்றால் சந்து உள்ளது, அதற்கு அடுத்து வாதிகள் இடம் உள்ளது. வாதிகளுக்கு மேற்படி வடக்கே 3 இலக்க சொத்துக்கள் பாத்தியம் என்றால் சரியல்ல. வாதிகள் சொத்திற்கு மேற்கே மேலத்தெரு என்றால் சரிதான். வாதிகள் சொத்திற்கு வடக்கே சின்னாத்தேவர் வீடு என்றால்

சரியல்ல. வாதிகள் சொத்திற்கு கிழக்கே யார் சொத்து உள்ளது என்றால் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தும், பிச்சைத்தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்தும் உள்ளது. 3வது இலக்க சொத்திற்கு கிழக்கே அக்ரகாரதெரு உள்ளது என்றால் 3வது இலக்க சொத்து எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு தெற்கே உள்ள சொத்து யாருக்கு பாத்தியம் என்றால் எங்களுக்குதான் பாத்தியம். எப்படி பாத்தியம் என்றால் கிரைய பாத்தியம்.

3. யாரிடமிருந்து கிரையம் பெற்றோம் என்றால் எனது அப்பா வழி தாத்தா கிரையம் பெற்ற சொத்து யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்று தெரியாது. எனது வாக்குமூலத்தில் சர்வே எண்.214/23 ல் கட்டுப்பட்ட சொத்தை எனது தாத்தா மற்றும் பாட்டி ஜெகநாதன் அய்யங்கார் என்பவரின் மகனான நாராயண அய்யங்காரிடம் கிரையம் பெற்றுள்ளோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விபரத்தை கிரைய பத்திரங்களை பார்த்துதான் சொல்லியுள்ளேன் என்றாலும் மேற்படி கிரைய பத்திரங்கள் பதிவு கிரைய பத்திரங்கள் என்றால் சரிதான்.

4. மேற்படி கிரைய பத்திரங்கள் எனது கைவசம்தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மேற்படி கிரைய பத்திரத்தின் சொத்து விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் தெரியும். மேற்படி சொத்து விபரங்களின் நான்குமால் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நான்குமால் தெரியுமா என்றால் வடக்கே சந்தும், பிச்சை மகன் சங்கர் இடம் உள்ளது. தெற்கே கந்தன் சங்கிலி இடம் உள்ளது. கிழக்கே அக்ரகார வீதியும், மேற்கே மேலத்தெருவும் உள்ளது. மேற்படி கிரைய பத்திரத்தை நான் தாக்கல்

செய்தால் நான்குமால் விபரம் தவறானது என்று தெரியவரும் என்பதால் கிரைய பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது.

5. வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தது எனது தாத்தா என்றால் சரிதான். எனது தாத்தா இறந்த பிறகு எனது தாத்தாவின் வாரிசுகள் தரப்பினராக சேர்க்கப்பட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு தெற்கே உள்ள சொத்தானது எனது தாத்தா மற்றும் பாட்டியால் கிரையம் வாங்கியது என்று எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாத்தாவின் எதிர்வழக்குரையின் விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

6. எனது அப்பா தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 22.07.1976 மற்றும் 13.07.1984 ல் ஏற்பட்ட கிரைய ஆவணங்கள் என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி 2 கிரைய ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ2 ஆவணமானது சர்வே எண். 214/23 என்பது எனக்கு கொடுக்கப்பட்ட தோராயப்பட்டா என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிடும் சமயம் நானும் உடன் இருந்தேன் என்றால் சரிதான். சர்வே எண். 214/23 சொத்தை அளந்து பார்க்க சொன்னேனா என்றால் சொன்னேன். வரைபடம் இல்லை என்று யார் சொன்னார் என்றால் சர்வேயர் சொன்னார். மேற்படி 2 சொத்துக்களையும் நீதிமன்ற ஆணையர் அளந்தாரா என்றால் அளக்கவில்லை. பார்வையிட்டார்.

7. மேற்படி ஆணையர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரைய பத்திரம் எனது சொத்து தென்வடல் அளவு எவ்வளவு என்றால் தெரியாது. கிழமேல் அளவு எவ்வளவு என்றால் 200 அடி ஆகும். எனது வீட்டின் வடக்கு சுவரின் எந்தவிதமான ஜன்னல் நிலைகதவும் கிடையாது என்றால் சரிதான். எனது வீட்டின் வடக்கில் காலி இடம் இருந்தது என்றால் சந்து அதற்கு அடுத்து வீடு உள்ளது. மேற்படி வீடு இடிந்து உள்ளது என்றால் சரிதான். வாதிகள் வீடு இடிந்தும், சந்தும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சந்து வாதிகளின் பாத்தியப்பட்ட வீடு என்றால் அரசு புரம்போக்கு சந்து ஆகும், சர்வே எண். 214/22 ஆகும்.

8. சர்வே எண்.214/22 என்பது சந்து என்று சர்வேயர் சொல்லியுள்ளரா என்றால் சொல்லியுள்ளார். அதற்கு ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ1, பி.வா.சா.ஆ4 மற்றும் பி.வா.சா.ஆ. 10 ஆவணங்கள் எப்போது ஏற்பட்டது என்றால் தெரியாது. மேற்படி ஆவணங்கள் எனது சொத்திற்கு ஏற்பட்டது அல்ல என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ1 ஆவணம் எங்களுக்கு பாத்தியப்பட்ட பட்டா என்றால் சரிதான். பி.வா.சா.ஆ1 ஆவணம் 27.10.2025 ம் தேதிதான் எடுத்துள்ளேன் என்றால் சரிதான். மற்ற ஆவணங்களும் அதே தேதியில்தான் எடுக்கப்பட்டன என்றால் சரிதான்.

9. பி.வா.சா.ஆ. 3 ஆவணம் முதல் பி.வா.சா.ஆ10 வரையிலான ஆவணங்கள் தாவா சொத்துக்கோ எங்களுக்கோ சம்பந்தப்பட்ட ஆவணம் இல்லை என்றால் சரிதான். சோணைத்தேவருக்கு ராமு, நடராஜன், ஈஸ்வரன் என்பவர்கள் வாரிசுகளா என்றால் வாரிசுகள்தான். நடராஜன்

என்பவர் என்னுடைய பெரியப்பா என்றால் சரிதான். அவர் உயிருடன் இருக்கிறார் என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக அவருக்கு தெரியும் என்றால் தெரியும்.

10. நடராஜன் என்பவர் நீதிமன்றத்திற்கு சாட்சியாக விசாரணை செய்ய உள்ளோமா என்றால் இல்லை. மேற்படி 3 இலக்க சொத்தும் வாதிகளுக்கு பாத்தியம் என்றாலும் 17.01.2006 ல் சோணையை சார்ந்தவர்களும் வாதிகளுக்கு இடைஞ்சல் செய்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாரிசுகளை இவ்வழக்கு கட்டுப்படுத்தும் என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா இடையூறு செய்யவில்லை. இவ்வழக்கின் சங்கதிகள் எங்களை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. மேற்படி 3 இலக்க சொத்தும் வாதிகளுக்கு பாத்தியம் அவர்கள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் எங்களுக்கு எந்தவித பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 01.00 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.25 10:07:01 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.